# தகவல் தாள்: குடும்ப வன்முறை

குடும்ப வன்முறை என்பது குடும்ப உறுப்பினரை உடல், பாலியல், உணர்வு அல்லது உளவியல் ரீதியாக தவறாக நடத்துகின்ற, அச்சமூட்டுகின்ற, அல்லது வேறு ஏதேனும் வழியில் கட்டுப்படுத்துகின்ற அல்லது ஆதிக்கம் செலுத்துகின்ற அல்லது அவர்களை அச்சப்பட வைக்கின்ற ஏதேனும் நடத்தையாகும். ஒரு குடும்ப உறுப்பினரை ஆதிக்கம் செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் வன்முறை பயன்படுத்தப்படுகிறது.

வன்முறை என்பது உடல்ரீதியாக துன்புறுத்துவது என்று மட்டுமே பொருள் அல்ல. பாலியல், உணர்வு, உளவியல், சமூகம், பொருளாதாரம், வாய்வார்த்தை மற்றும் ஆன்மீக ரீதியாகவும் குடும்ப வன்முறை மேற்கொள்லப்படலாம்.

## குடும்ப வன்முறையின் வகைகள்

### சமூக ரீதியானவை

குடும்பம், நண்பர்கள் மற்றும் பிற சமூக வளையத்திலிருந்து ஒரு நபரை விலக்கி வைத்துத் தனிமைப்படுத்துதல்

### வாய்வார்த்தை ரீதியானவை

ஒரு நபரைக் கேலி செய்கின்ற அல்லது சிறுமைப்படுத்துகின்ற வாய்வார்த்தையான பழித்தல் மற்றும் அவமதித்தல்

### பாலியல் ரீதியானவை

விருப்பமற்ற மற்றும் பலவந்தமான பாலியல் நடவடிக்கை அல்லது தொந்தரவு

### உணர்வு ரீதியானவை

மனநலனைப் பாதிக்கச் செய்கின்ற நடத்தைகள் மற்றும் செயல்கள்

### பொருளாதார ரீதியானவை

ஒரு நபரின் நிதி நிலைமைகளைக் கட்டுப்படுத்துகின்ற மற்றும் அவர் பொருளாதார ரீதியாக சுயசார்புடன் இருப்பதை அனுமதிக்காத நடத்தைகள் மற்றும் செயல்கள்

### ஆன்மீக ரீதியானவை

வன்முறையை நியாயப்படுத்துவதற்காக மதம் அல்லது ஆன்மீகம் சார்ந்த நம்பிக்கைகளைப் பயன்படுத்துதல் அல்லது குறிப்பிட்ட மதம் சார்ந்த நம்பிக்கைகளை ஒரு நபர் கடைப்பிடிப்பதைத் தடுத்தல்

### உடல் ரீதியானவை

உடல் பலத்தைப் பயன்படுத்தி வலியையும் காயத்தையும் ஏற்படுத்துதல்

### உளவியல் ரீதியானவை

ஒரு நபரை ஆபத்தில் இருப்பவராக, ஆற்றல் அற்றவராக மற்றும் சிக்கிக்கொண்டவராக உணர வைக்கின்ற நடத்தைகள் மற்றும் செயல்கள்

**ஆதாரம்:** *பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கான தேசிய மன்றம் (National Council). (2009).* Time for Action -க்கான பின்புலத் தாள்: பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கு தேசிய மன்றத்தின் (National Council) ஆஸ்திரேலியாவிற்கான திட்டம். *பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கான தேசிய மன்றம் (National Council). கேன்பெர்ரா.*

---

இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.


# தகவல் தாள்: பெண்களுக்கு எதிரான வன்முறை

பெண்களுக்கு தீங்கு விளைவிக்கின்ற அல்லது வேதனைப்படுத்துகின்ற எந்த வகையான வன்முறையும் பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்.

பெரும்பாலும் பெண்கள் தான் குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர். பெரும்பாலும் ஆண்களே இக்குற்றத்தைச் செய்கின்றனர்.


## '10 -இல் 9 -க்கும் அதிகமான

ஆண்கள் தான் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறையை மேற்கொள்கின்றனர்.





தற்போதைய அல்லது முன்னாள் **ஆண் வாழ்க்கைத் துணைவரால்** இத்தகைய வன்முறையைப் பெண்கள் அனுபவிப்பதற்கு அதிக வாய்ப்புள்ளது




28 சதவீதப் பெண்கள் தற்போதைய அல்லது முன்னாள் ஆண் வாழ்க்கைத் துணைவர், நண்பர் அல்லது காதலரால் வன்முறையை அனுபவித்துள்ளனர்

**ஆதாரங்கள்:**

Australian Bureau of Statistics. (2012). தனிப்பட்ட பாதுகாப்பு குறித்தக் கருத்தாய்வு. கேன்பெர்ரா: Australian Bureau of Statistics.

Diemer, K. (2012). *விக்டோரியாவில் குடும்ப வன்முறையை அளவிடுதல்: Victorian family violence database (Volume 5).* மெல்பர்ன், *விக்டோரியா: நீதித் துறை.*

இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.

City of Casey | Cardinia | Greater Dandenong City of Opportunity | MonashHealth | Victoria State Government

# தகவல் தாள்: பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்தப் பொதுவான கட்டுக்கதைகள்

## கட்டுக்கதை 1

### ஆண்கள் தான் முடிவெடுக்க வேண்டும் அத்துடன் .உறவுமுறைகளைக், கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**உண்மை: முடிவெடுப்பதை ஆண்கள் கட்டுப்படுத்தும் குடும்பங்களிலும் உறவுமுறைகளிலும் வன்முறை மிகவும் பொதுவாக உள்ளது. உறவுமுறைகளில் பெண்கள் அதிக சுதந்திரத்தைக் கொண்டிருந்தால் வன்முறை குறைவாக உள்ளது**

ஆண்களும் பெண்களும் வெவ்வேறு பொறுப்புகளையும் அல்லது குணநலன்களையும் கொண்டிருக்கின்றனர் (பொதுவாக உறவுமுறைகளில் அல்லது சமுதாயத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும்) என்ற நம்பிக்கை பாலினம் குறித்த பிறப்போக்கு எண்ணம் (Gender Stereotyping) என்றழைக்கப்படுகிறது. அத்தகைய பிறப்போக்கு எண்ணங்களின் மீதுள்ள நம்பிக்கையே வன்முறைக்கான மிகவும் குறிப்பிடத்தகுந்த காரணிகளில் ஒன்றாக உள்ளது என்று சர்வதேச ஆய்வுகள் மீண்டும் மீண்டும் தெரிவித்துள்ளன. அதாவது, அத்தகைய நம்பிக்கைகளைக் கொண்டிருக்கும் தனிநபர்கள் பெண்களுக்கு எதிரான வன்முறையை மேற்கொள்வதற்கு அதிக வாய்ப்புள்ளது, மேலும் பாலினம் குறித்த பிறப்போக்கு எண்ணம் அதிக அளவில் ஏற்றுக்கொள்ளப்படும் நாடுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிக அளவில் நடக்கின்றன.

தங்களுடைய உறவுமுறைகளில் அதிக சமத்துவத்தைக் கொண்டிருக்கின்ற மற்றும் தங்களுடைய பாலினத்தின் அடிப்படையில் வெவ்வேறு பணிப் பொறுப்புகளைக் கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்காத ஆண்களும் பெண்களும் உள்ள சமுதாயங்களில் சற்று அரிதாகவே இத்தகைய வன்முறைகள் நடைபெறுகின்றன. அதிக சமத்துவம் மற்றும் அதிகம் வளைந்துகொடுக்கும் பாலினப் பொறுப்புகள் ஆகியவை ஒவ்வொருவரும் தங்களுடைய முழுத் திறனை வளர்த்துக்கொள்வதற்கான அதிக வாய்ப்புகளை வழங்குகிறது.

## கட்டுக்கதை 2

### ஒருவர் தனது கட்டுப்பாட்டை இழக்கும் அளவிற்கு அதிகமாக கோபப்படுகிறார் எனில், அங்கு குடும்ப வன்முறை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**உண்மை: பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது உங்கள் கோபத்தை உங்களால் கட்டுப்படுத்த இயலாததைக் காட்டிலும் மோசமானதாகும்.**

வன்முறையான நடத்தைக்கு எந்த மன்னிப்பும் கிடையாது. ஒருபோதும் கிடையாது. வன்முறை என்பது பெண்களுக்கு எதிரான ஒருவரின் மனப்பான்மைகளாலும், மேலும் பெண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறையை ஏற்றுக்கொள்கின்ற சமூக மனப்பான்மைகளாலும் விளைவிக்கப்படுவதாகும்.

## கட்டுக்கதை 3

### பெண்கள் ஒரு வன்முறையான உறவுமுறைகளில் இருந்து விலக விரும்பினால், அவர்கள் விலகிக் கொள்ளலாம்.

**உண்மை: பெண்கள் ஒரு வன்முறையான உறவுமுறையில் இருந்து விலக முயற்சி செய்யும் போது அல்லது விலகிய பிறகு அவர்கள் கொல்லப்படுவது உள்ளிட்ட உச்சபட்ச வன்முறையைச் சந்திக்கும் ஆபத்தை அவர்கள் கொண்டிருக்கின்றனர். பாதுகாப்பு குறித்த அச்சம் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவற்றின் காரணமாக பெண்கள் ஒரு வன்முறையான உறவுமுறையில் இருந்து விலகுவது மிகவும் சிரமமாகும்.**

பெண்கள் ஒரு உறவுமுறையில் இருந்து விலகவில்லை எனில், அவர்கள் மீதான வன்முறைக்கு அதுவே காரணம் என்று நாம் குற்றம் சுமத்தக் கூடாது.

இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.

# தகவல் தாள்: பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்தப் பொதுவான கட்டுக்கதைகள்

கட்டுக்கதை 4

## பெண்கள் ஒரு பொது இடத்தில் அந்நியரால் கற்பழிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.

**உண்மை: ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருமே ஒரு அந்நிய நபரைக் காட்டிலும் தாங்கள் நன்கு அறிந்த யாரேனும் ஒரு நபரால் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தப்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.**

Australian Bureau of Statistics -இன்படி, 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்துப் பெண்களில் 15 சதவீதத்தினரும், அனைத்து ஆண்களில் 3 சதவீதத்தினரும் தங்களுக்கு நன்கு அறிந்த ஒரு நபரால் தான் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளனர். ஆனால், அனைத்துப் பெண்களில் 3.8 சதவீதத்தினரும், அனைத்து ஆண்களில் 1.6 சதவீதத்தினரும் ஒரு அந்நிய நபரால் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தப்பட்டுள்ளனர்.

தாங்கள் அறிந்த யாரேனும் ஒருவரால் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தப்பட்டது குறித்துப் பெண்கள் புகார் அளிப்பதற்கு குறைந்த வாய்ப்பு உள்ளதே அந்நியரால் ஆபத்து என்ற கட்டுக்கதைக்கான காரணங்களில் ஒன்றாகும். தங்களை யாரும் நம்ப மாட்டார்கள் அல்லது அக்குற்றச் செயலைச் செய்தவரை தாங்களே ஏதேனும் வழியில் ஊக்குவித்துள்ளோம் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கக்கூடும். இக்கட்டுக்கதை பொய் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டால், நன்கு அறிந்த ஒரு நபரால் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தப்படுவது குறித்து புகார் அளிப்பதற்கு பெண்கள் தயக்கமின்றி முன்வரக்கூடும்.

கட்டுக்கதை 5

## குடும்ப வன்முறை அல்லது பாலியல்ரீதியான துன்புறுத்தல் தொடர்பாக பல பெண்கள் தவறாகப் புகார் செய்கின்றனர்.

**உண்மை: குடும்ப வன்முறை அல்லது பாலியல்ரீதியான துன்புறுத்தல் தொடர்பாகத் தவறாகப் புகார் செய்வது மிகவும் அரிதாகவே உள்ளது.**

தற்போதுள்ள வாழ்க்கைத் துணையால் மேற்கொள்ளப்படும் வன்முறையை அனுபவிக்கும் 80 சதவீதப் பெண்கள், அது தொடர்பாக காவல்துறையைத் தொடர்புகொள்வதில்லை.

இது பாலியல்ரீதியான துன்புறுத்தலுக்கும் பொருந்துகிறது; 80 சதவீதப் பெண்கள் பாலியல்ரீதியான துன்புறுத்தல் குறித்து காவல்துறையிடம் புகார் அளிப்பதில்லை.

வன்முறை குறித்து யாரிடமேனும் கூறுவதற்கு பெண்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கும் என்பதால், நாம் அவர்களை நம்புவது மிகவும் முக்கியமாகும்.

**ஆதாரம்:**


Our Watch. (2015). **வன்முறை குறித்தக் கட்டுக்கதைகள்**. www.ourwatch.org.au/Understanding-Violence/Myths-about-violence இல் இருந்து எடுக்கப்பட்டவை

இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.


# தகவல் தாள்: குழந்தைகளுக்கு எதிரான வன்முறை



வீட்டில் குடும்ப வன்முறை நிகழும் போது பெரும்பாலும் குழந்தைகள் உடனிருக்கின்றனர்.




தங்களுடைய வாழ்வில் குடும்ப வன்முறையை அனுபவிக்கின்ற 50 சதவீதத்திற்கும் அதிகமான ஆஸ்திரேலியப் பெண்கள், அத்தகைய நேரங்களின் போது தங்கள் குழந்தைகளைக் கவனமுடன் பராமரிக்கின்றனர்.



நான்கில் ஒரு இளைஞர் (12 முதல் 20 வயதானவர்கள்) தங்களுடைய தாய் அல்லது மாற்றாந்தாய்க்கு எதிரான வன்முறையை நேரில் கண்டிருக்கிறார்கள்

## தாய்கள் வன்முறையை அனுபவிக்கும் போது,

அவர்களின் குழந்தைகளும் கூட தவறான நடத்தையால் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. தாய் மற்றும் குழந்தை மீது அதே நபர் வன்முறையாக நடந்துகொள்கிறார் அல்லது வன்முறையான நடவடிக்கைகளில் சிக்கிக்கொள்ளும் போது குழந்தைக்கும் காயம் ஏற்படலாம் என்பதே இதற்குக் காரணமாகும். குழந்தைகள் தங்கள் பெற்றோர்களாலும் கூட புறக்கணிக்கப்படலாம்.

வன்முறை மற்றும் தவறான நடத்தையை குழந்தைகள் அனுபவிப்பது, **குழந்தைகளிடம் தவறான நடத்தை (CHILD ABUSE)** என்று அறியப்படுகிறது.

**ஆதாரங்கள்:**


Australian Bureau of Statistics. (2006). *தனிப்பட்ட பாதுகாப்பு குறித்தக் கருத்தாய்வு*. கேன்பெர்ரா: Australian Bureau of Statistics.

Laing, L. (2003). *குழந்தைகளிடம் தவறான நடத்தை மற்றும் புறக்கணிப்பு ஆகிய சூழ்நிலையில் குடும்ப வன்முறை*. Issues paper, Australian Domestic and Family Violence Clearinghouse, UNSW, Sydney.

இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.


City of Casey | Cardinia | Greater Dandenong City of Opportunity | MonashHealth | Victoria State Government

# தகவல் தாள்: ஆண்களுக்கு எதிரான வன்முறை



ஆண்களுக்கு எதிரான வன்முறையானது, வழக்கமாக ஒரு அந்நிய ஆண் அல்லது ஆண் நண்பர் அல்லது முகமறிந்த நபர் என பெரும்பாலும் மற்ற ஆண்களால் மேற்கொள்ளப்படுவதற்கே அதிக வாய்ப்புள்ளது.

ஆண்களுக்கு எதிரான வன்முறையில் வெறும் 5 சதவீதம் மட்டுமே தற்போதுள்ள அல்லது முன்னாள் பெண் வாழ்க்கைத்துணையாலும், 3.5 சதவீதம் பெண் தோழியாலும் (அல்லது காதலி) மேற்கொள்ளப்படுகின்றன




ஆண்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்படும் போது, அது வழக்கமாக

**ஆண் உறவினர்களால்**

தந்தைகள், சகோதரர்கள் அல்லது பிற திருமண வழி உறவினர்கள் போன்றவர்களால் தான் மேற்கொள்ளப்படுகிறது.

**ஆதாரம்:**

Australian Bureau of Statistics. (2012). தனிப்பட்ட பாதுகாப்பு குறித்தக் கருத்தாய்வு. கேன்பெர்ரா: Australian Bureau of Statistics.

இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.

# தகவல் தாள்: நமது சமுதாயத்தின் மீது குடும்ப வன்முறையின் தாக்கங்கள்

ஒரு நபரின் உடல்நலம் மற்றும் நலவாழ்வு மீது குடும்ப வன்முறை கடுமையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

விக்டோரியாவில், உயர் இரத்த அழுத்தம், உடற்பருமன் மற்றும் புகைப்பிடித்தல் உள்ளிட்ட வேறு எந்த ஆபத்துக் காரணிகளைக் காட்டிலும், தவிர்க்கப்படக்கூடிய உடல் சுகவீனம் மற்றும் முன்கூட்டிய மரணம் ஆகியவற்றை 15 முதல் 44 வயதான பெண்களிடத்தில் ஏற்படுத்துவதில் பெண்களுக்கு எதிரான நெருக்கமான வாழ்க்கைத்துணை வன்முறையே முன்னிலையில் உள்ளது.

குழந்தைகளுக்கு எதிரான வன்முறை, காயங்களையும் உடற்குறைகளையும் விளைவிக்கலாம்.

ஆஸ்திரேலியப் பொருளாதாரத்தில் குடும்ப வன்முறையால் ஏற்படும் மொத்த செலவு **$13.6 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது**

வன்முறையை அனுபவித்துள்ள பெண்கள், மனக்கலக்கம் மற்றும் மனவழுத்தம் மற்றும்/அல்லது உணவு உண்ணும் பழக்கத்தில் சீர்கேடுகளைக் கொண்டிருப்பதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. அவர்கள் மது அருந்துதல், புகைப்பிடித்தல் மற்றும் மருத்துவரால் பரிந்துரைக்கப்படாத மருந்துகளைப் பயன்படுத்துதல் ஆகிய பிரச்சனைகளைக் கொண்டிருப்பதற்கும் அதிக வாய்ப்புள்ளது.

குடும்ப வன்முறையை அனுபவிக்கின்ற அல்லது கவனிக்கின்ற குழந்தைகள், மனவழுத்தம், மனக்கலக்கம், பேரதிர்ச்சி, முரட்டுத்தனம், சமூக விரோத நடத்தை, குறைவான சுய-கௌரவம், அச்சம், மனநிலைப் பிரச்சனைகள் மற்றும் சகக் குழுவினருடன் முரண்பாடு ஆகியவற்றை அனுபவிக்கலாம்.


**ஆதாரங்கள்:**

Braaf, R. (2012). உடல்நலத்தின் மீது இல்லம் மற்றும் குடும்ப வன்முறை ஏற்படுத்தும் தாக்கங்கள் Sydney, Australian Domestic and Family Violence Clearinghouse, UNSW.

பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கான தேசிய மன்றம் (National Council). (2009). *பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையால் ஏற்படும் பொருளாதாரச் செலவுகள்.* Commonwealth Government of Australia, Department of Families, Housing, Community Services and Indigenous Affairs, Canberra,

Richards, K. (2011). ஆஸ்திரேலியாவில் குடும்ப வன்முறைக்கு குழந்தைகள் வெளிப்படுதல். *குற்றம் மற்றும் குற்றவியல் நீதியில் உள்ள போக்குகள் மற்றும் பிரச்சனைகள், எண். 419, ஜூன் 2011.*

Vichealth. (அறியப்படவில்லை). *பெண்களுக்கு எதிரான வன்முறை எவ்வாறு உடல்நலத்தைப் பாதிக்கிறது.* www.vichealth.vic.gov.au/Programs-and-Projects/Freedom-from-violence/PVAW-overview.aspx -இல் இருந்து எடுக்கப்பட்டது



இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.

# தகவல் தாள்: குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளித்தல்

சிரமமான நேரங்களில் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுக்காக மக்கள் தாங்கள் நம்பிக்கை வைத்துள்ள தலைவர்கள் மற்றும் சமுதாய மக்களிடமே பெரும்பாலும் செல்கின்றனர். குடும்ப வன்முறையை அனுபவித்துள்ளவர்கள் தங்கள் நம்பிக்கைக்குரிய சமுதாயங்களிடமிருந்து ஆதரவையும் ஆலோசனையையும் நாடலாம். என்ன சொல்வது அல்லது என்ன செய்வது என்பதை அறிந்துகொள்வது சிரமமாக இருக்கலாம் என்றாலும், உணர்வுப்பூர்வமாக இருப்பதற்கும், உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்கும் நினைவில் கொண்டிருப்பது முக்கியமாகும். இவற்றை நினைவில் கொள்ளுங்கள்:

**அந்நபரை நம்புங்கள் மற்றும் நீங்கள் அவரை நம்புகிறீர்கள் என்று அவரை அறியச் செய்யுங்கள்.**

**அவருடைய அனுபவங்களைக் கவனமாகக் கேளுங்கள்.**

**நடுநிலையோடு இருங்கள்.**

**வன்முறைக்கு அவர்கள் காரணமில்லை என்று அவர்களிடம் கூறுங்கள்.**

**அந்நபரின் கதையை இரகசியமாக வைத்துக்கொள்ளுங்கள். அதை மற்றவர்களிடம் கூறுவதால் அவர்கள் மேற்கொண்டு வன்முறைக்கு ஆளாகலாம்.**

**அந்நபரின் முடிவுகளுக்கு மதிப்பளியுங்கள்.**

**1800 RESPECT (1800 737 732) அல்லது SAFE STEPS FAMILY VIOLENCE (1800 015 188) போன்ற ஆதரவுச் சேவைகள் குறித்த பொருத்தமான தகவல்களை அளிக்கவும்.**

குடும்ப வன்முறையை அனுபவித்துள்ள ஒருவருக்கு ஆதரவளிப்பது மனவேதனை அளிப்பதாக இருக்கலாம். உங்களை நீங்களே கவனித்துக்கொள்வதும் முக்கியமாகும், மேலும் இவற்றை நினைவில் கொள்ளுங்கள்:

**உங்கள் உதவியும் ஆதரவும் முக்கியமாகும்.**

**உங்களால் வழங்க முடிவதைக் காட்டிலும் அதிக ஆதரவை அளிக்க உங்களுக்கு நீங்களே அழுத்தம் கொடுக்கக் கூடாது.**

**உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றாலோ அல்லது நீங்கள் அதிக உணர்ச்சிவசப்பட்டாலோ ஒரு சேவை வழங்குநரிடம் பேசுங்கள்.**

இதிலிருந்து தழுவப்பட்டது: Domestic Violence Resource Centre Victoria (http://www.dvrcv.org.au/help-advice/guide-for-families-friends-and-neighbours)

இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.

# தகவல் தாள்: குடும்ப வன்முறை குறித்து சட்டம் என்ன சொல்கிறது?

வன்முறை மற்றும் தவறான நடத்தையினால் பாதிக்கப்படாமல், பாதுகாப்பாக வாழ்வதற்கான உரிமை ஒவ்வொருவருக்கும் உள்ளது. உடல்ரீதியாக காயப்படுத்துவது, அச்சுறுத்துவது அல்லது மற்றொரு நபரை பாலியல் தொடர்புக்கு வற்புறுத்துவது அல்லது கட்டாயப்படுத்துவது ஆகியவை சட்டத்திற்கு எதிரானவையாகும்.

யாரேனும் ஒருவர் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளார் எனில், அல்லது அவர் உடல்ரீதியாகவோ அல்லது பாலியல்ரீதியாகவோ தாக்கப்பட்டுள்ளார், அச்சுறுத்தப்பட்டுள்ளார் அல்லது மறைமுகமாகப் பின்தொடரப்பட்டுள்ளார் எனில், அவர் 000 என்ற எண்ணில் காவல்துறையை அழைக்கலாம்.

விக்டோரியாவில், யாரேனும் ஒருவருக்கு மேற்கொண்டு வன்முறையிலிருந்து பாதுகாப்பு தேவைப்பட்டால், அவர்கள் ஒரு இடையீட்டு ஆணைக்காக (Intervention Order) விண்ணப்பம் செய்யலாம். காவல்துறையும் கூட அந்நபரின் சார்பாக ஒரு இடையீட்டு ஆணைக்காக (Intervention Order) விண்ணப்பம் செய்யலாம். இடையீட்டு ஆணை (Intervention Order) என்பது ஒரு நீதிமன்ற ஆணையாகும். வன்முறைச் செயலை மேற்கொண்டவர்கள் அந்நபரைக் காயப்படுத்தக்கூடாது அல்லது அச்சுறுத்தக்கூடாது, அல்லது அந்நபருக்கு அருகில் செல்லக்கூடாது அல்லது தொடர்புகொள்ளக் கூடாது போன்ற பல்வேறு நிபந்தனைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கலாம். குற்றச்செயலை மேற்கொண்டவர்கள் இடையீட்டு ஆணையை (Intervention Order) மதித்து நடக்கவில்லை எனில், அவர்கள் மீது குற்றவியல் வழக்கு தொடுக்கப்படும்.

## குடும்ப வன்முறை குறித்து புகார் தெரிவித்தல்

விக்டோரியாவில், ஒரு குழந்தை பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது உடல்ரீதியான தீங்கு அல்லது பாலியல்ரீதியாகத் தவறான நடத்தைக்கு உட்படுத்தப்படும் அபாயத்தில் இருந்தால், குறிப்பிட்ட பதவிப் பொறுப்புகளில் உள்ள மக்கள் புகார் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகும். இவர்களில் மருத்துவர்கள், தாதிகள், பேறுகால உதவியாளர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள், பதிவுபெற்ற உளவியல் நிபுணர்கள் அல்லது சுகாதாரம், கல்வி, சமுதாயம் அல்லது நலவாழ்வுச் சேவைகளில் பணிபுரிகின்ற இளையர், சமூக அல்லது நலவாழ்வுப் பணியில் உயர்நிலைக்குப் பிந்தைய கல்வித் தேர்ச்சிகளைப் பெற்ற எந்த நபர்களும் உள்ளடங்குவர்.

இப்பதவிப் பொறுப்புகளில் ஒன்றை (அல்லது அதற்கு மேல்) ஒரு மதத் தலைவர் வகிக்கிறார் எனில், அவர் ஒரு குழந்தைக்கான உடல் அல்லது பாலியல் ரீதியான தீங்கு குறித்துப் புகார் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்.

விக்டோரியாவில், பெரியவர்கள் மீதான குடும்ப வன்முறை குறித்து மதத் தலைவர்கள் புகாரளிக்க வேண்டியது சட்டப்படி அவசியமில்லை.




**ஆதாரங்கள்:**

விக்டோரியா குடும்ப வன்முறை ஆதார மையம் (Domestic Violence Resource Centre Victoria) (http://www.dvrcv.org.au/help-advice/are-you-happy)

Australian Institute of Family Studies.

(https://www3.aifs.gov.au/cfca/publications/mandatory-reporting-child-abuse-and-neglect)


இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.


City of Casey | Cardinia | Greater Dandenong City of Opportunity | MonashHealth | Victoria State Government

# தகவல் தாள்: பெண்களுக்கு எதிராக வன்முறை நிகழ்வதை நாம் எவ்வாறு தடுத்து நிறுத்தலாம்?

பெண்களுக்கு எதிராக வன்முறை நிகழ்வதற்கு முன்னரே அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்மால் முதலில் நடவடிக்கை எடுக்க முடியும். இது முதன்மையான தடுப்பு நடவடிக்கை என்று அறியப்படுகிறது.

பெண்களுக்கு எதிராக ஏன் வன்முறை நடக்கிறது என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஆகையால், பெண்களுக்கு எதிரான வன்முறைக்கான முக்கியக் காரணிகள் எவை?

- ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே உள்ள சரிசமமற்ற அதிகாரம்.
- வளைந்து கொடுக்காத பாலினப் பணிப் பொறுப்புகள் மற்றும் பிற்போக்கான எண்ணங்கள்.
- ஆண்களால் மேற்கொள்ளப்படும் வன்முறையை மன்னிக்கின்ற சமூக மனப்பான்மைகள்.

## ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையே உள்ள சரிசமமற்ற அதிகாரம்

ஆண்களும் பெண்களும் கொண்டிருக்கும் அதிகாரமும் செல்வாக்கும் சரிசமமானதாக இருப்பதில்லை. பெரும்பாலும், ஆண்கள் பொது வாழ்க்கையிலும் தனிப்பட்ட வாழ்க்கையிலும் அதிக அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர். உதாரணமாக, அரசியல், வர்த்தகம் மற்றும் மதம் ஆகியவற்றில் பெரும்பாலும் ஆண்களே தலைமைப் பொறுப்புகளை வகிக்கின்றனர். அவர்கள் தங்கள் உறவுமுறைகளிலும் தங்கள் வீட்டிலும் கூட அதிக அதிகாரத்தைக் கொண்டிருக்கலாம்.

## வளைந்து கொடுக்காத பாலினப் பணிப் பொறுப்புகள் மற்றும் பிற்போக்கான எண்ணங்கள்

பாலினப் பொறுப்புகள் மற்றும் பிற்போக்கான எண்ணங்கள் என்பவை ஒரு 'ஆண்' எனவும் ஒரு 'பெண்' எனவும் எது அர்த்தப்படுத்துகிறது என்பது குறித்த நம்பிக்கைகளாகும். பணி, வீட்டுப் பொறுப்புகள், குழந்தை வளர்ப்பு, ஓய்வுநேரம் மற்றும் உடை ஆகியவை தொடர்பாக ஆண்கள் மற்றும் பெண்களுக்குரிய நடத்தைகள் எவை என்பது இதில் உள்ளடங்குகிறது.

## ஆண்களால் மேற்கொள்ளப்படும் வன்முறையை மன்னிக்கின்ற சமூக மனப்பான்மைகள்

இத்தகைய சமுதாயக் கோட்பாடுகள், ஆண்கள் முரட்டுத்தனமாக இருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ளலாம் என்று நமது சமூகத்தில் உள்ள நம்பிக்கைகளாகும். விளையாட்டு, ஊடகம், ஆகியவற்றில் ஆண்கள் 'வலிமையானவராகவும்', 'உறுதியானவராகவும்' விவரிக்கப்படும் விதம் போன்றவற்றில் இந்த வகையான சமுதாயக் கோட்பாடுகள் நமது சமூகம் முழுவதும் காணப்படலாம்.

பெண்களின் உறவுமுறைகளில் அவர்கள் தரக்குறைவாகவும் கண்ணியமின்றியும் நடத்தப்படுவதற்கு வழிவகுக்கின்ற நம்பிக்கைகளையும் செயல்களையும் இத்தகைய முக்கியக் காரணிகள் ஆதரிக்கின்றன.

வறுமை, மது, ஒரு குழந்தையாக வன்முறையைக் காணுதல் அல்லது வன்முறையான நண்பர்களைக் கொண்டிருப்பது போன்ற பிற காரணிகள், பெண்களுக்கு எதிரான வன்முறையில் முக்கியமானவையாக உள்ளன. இத்தகைய காரணிகள், பெண்களுக்கு எதிரான வன்முறைக்குப் பங்களிக்கின்றன என்றாலும், வன்முறையை விளைவிப்பதில்லை.

## பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதற்கு, நாம் பாலின ரீதியான ஏற்றத்தாழ்வைப் போக்க வேண்டும்.

இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.

# தகவல் தாள்: பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுப்பதில், பாலினச் சமத்துவத்தின் முக்கியத்துவம்

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே அதிக பாலினச் சமத்துவத்தைக் கொண்டிருக்கும் நாடுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறைந்த அளவிலேயே நடைபெறுகின்றன என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

நம் சமுதாயங்களிலும் நமது சமூகங்களிலும் பரவியுள்ள பாலின ஏற்றத்தாழ்வுகளை நாம் தனிநபர்களாகப் போக்க முடியும்.

| | உதாரணங்கள் |
|---|---|
| **தனிநபர்** | • பாலினம் குறித்த பிற்போக்கான எண்ணத்திற்கு எதிராக குரல் கொடுத்தல்.<br>• பெண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறையை ஆதரிக்கும் மனப்பான்மைகளைக்கு சவால் விடுதல்.<br>• மரியாதை நிறைந்த உறவுமுறைகளை ஊக்குவித்து வளர்த்தல். |
| **சமுதாயம்** | • முடிவெடுக்கும் பொறுப்புகளில் பெண்களை ஈடுபடுத்துதல்.<br>• தலைமைப் பொறுப்புகளில் பெண்களை ஈடுபடுத்துதல். |
| **சமூகம்** | • பெண்களுக்குச் சரிசமமாக இல்லாத கட்டமைப்புகளையும் நடைமுறைகளையும் மாற்றுவதற்குப் பரிந்து பேசுதல். |


**ஆதாரங்கள்:**

பெண்களுக்கான ஐக்கிய நாடுகளின் வளர்ச்சி நிதி United Nations Development Fund for Women. (அறியப்படவில்லை).
*பாலினச் சமத்துவத்தில் முதலீடு செய்தல்: பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருதல்.*
www.endvawnow.org/uploads/browser/files/genderequality_vaw_leaflet_en_web.pdf -இல் இருந்து பெறப்பட்டது



இந்த வளஆதாரமானது CHALLENGE Family Violence திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. இது City of Casey, Cardinia Shire Council, City of Greater Dandenong மற்றும் Monash Health ஆகியவற்றுக்கு இடையிலான ஒரு கூட்டு முயற்சியாகும். பெண்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு எதிரான வன்முறையைக் குறைத்தல் (Reducing Violence against Women and their Children) நிதியுதவித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. இது உள்ளூர் குற்றத் தடுப்பு விவகாரங்களுக்கு உள்ளூர் தீர்வுகளான, விக்டோரியா அரசாங்கத்தின் Community Crime Prevention Program -இன் ஒரு அங்கமாகும்.